# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 195 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 11.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# முதலமைச்சர் விஜயுடன் ராகுல் காந்தி சந்திப்பு



## இருவரும் ஒரே காரில் பயணம்

இன்று மதியம் 12.30 மணிக்கு சென்னை விமான நிலையத்திற்கு ராகுல் காந்தி வருகை தந்தார். அவருக்கு காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். சென்னை விமான நிலையத்தில் இருந்து நீலாங்கரையில் உள்ள முதல்-அமைச்சர் விஜய் வீட்டிற்கு ராகுல் காந்தி சென்றார். ராகுல் காந்திக்கு விஜய் மதிய உணவு விருந்து அளித்தார். பின்னர் இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தினர். கட்சி நிர்வாகிகள் இன்றி தனியாக ராகுல் காந்தி ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் போது, தற்போதைய அரசியல் சூழல் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணி நேரம் இருவரும் ஆலோசனை நடத்தினர். அதன் பின்னர் ராகுல் காந்தியும், முதல்-அமைச்சர் விஜய்யும் நீலாங்கரையில் இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஒரே காரில் பயணம் செய்தனர். தொடர்ந்து பாலவாக்கத்தில் உள்ள கிரிக்கெட் வீரர் தோனிக்கு சொந்தமான ஒரு உணவகத்திற்கு சென்று தேநீர் அருந்தினர். தமிழக முதல்-அமைச்சர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சி தலைவரின் சந்திப்பை யொட்டி சென்னையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியில் அமைந்துள்ள



Bask by Coffee கஃபே, அதன் தனித்துவமான வடிவமைப்பு மற்றும் காபி வகைகளுக்காகக் கவனம்பெற்றுள்ளது. சுமார் 10,000 சதுர அடி பரப்பளவில், பழைய தொழிற்சாலைக் குடோன் (Factory Shed) போன்ற அமைப்பில் இந்தக் கஃபே உருவாக்கப்பட்டுள்ளது. உயரமான கூரைகள், கான்கிரீட் தூண்கள் மற்றும் தரையிலிருந்து கூரை வரை நீளும் பெரிய கண்ணாடிகள் இந்த இடத்தின் சிறப்பம்சங்களாக உள்ளன. கண்ணாடிகள் வழியாக உள்ளே வரும் இயற்கையான சூரிய ஒளி, கஃபேவின் உட்புறத் தோற்றத்துக்கு அழகு சேர்க்கிறது. திறந்தவெளி இருக்கைகள் உள்ளிட்ட வசதிகளும் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய கல்வி முறையில் நடைபெறும் முறைகேடுகள், நீட் உள்ளிட்ட தேர்வுத்தாள் கசிவுகள், கல்விக் கட்டண உயர்வு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களை திரட்டி நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி 'மாணவர்களின் குரல்' என்ற நிகழ்ச்சி வாயிலாக மாணவர்களிடம் பேசி வருகிறார்.

அதன்படி, ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் தொடங்கி, மராட்டிய மாநிலம் புனே மற்றும் நாசிக் நகரங்கள், மத்திய பிரதேசம் மாநிலம் இந்தூர் போன்ற இடங்களில் மாணவர்கள் குரல்' நிகழ்ச்சி நடத்திய ராகுல் காந்தி, சென்னையில் உள்ள தீவுத் திடலில் மாணவர்கள் முன்னிலையில் பேச இருக்கிறார்.

மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள

# பிரதமர் மோடி தமிழகம் வருகை எதிரொலி: 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு



சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் 118.1 கி.மீ. தொலைவுக்கு இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் முதற்கட்டமாக, வடபழனி முதல் பூந்தமல்லி வரையிலான 14.6 கி.மீ. வழித்தட மெட்ரோ பணிகள் முடிவடைந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் அனுமதியை பெற்றது.

இதனை தொடர்ந்து, இந்த மெட்ரோ ரயில் திட்டத்தை தொடங்கி வைப்பதற்கான தேதியை இறுதி செய்யுமாறு மத்திய அரசுக்கு மெட்ரோ நிறுவனம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், சட்டமன்றத் தேர்தல், புதிய அரசு பதவியேற்பு உள்ளிட்ட காரணங்களால் இந்த வழித்தடத்தின் தொடக்க தேதி தொடர்ந்து தள்ளிப் போய் கொண்டே இருந்தது.

இந்நிலையில், நாளை (அக்டோபர் 11) பிரதமர் நரேந்திர மோடி பூந்தமல்லி-வடபழனி வழித்தட மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைக்கிறார். பின்னர் அதே ரயிலில் பிரதமர் மோடியும், முதலமைச்சர் விஜய்யும் ஒன்றாக பயணிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆரம்பத்தில் 11 ரயில் நிலையங்களுடன் இந்த மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, பின்னர் கூடுதலாக 6 ரயில் நிலையங்கள் பயன்பாட்டுக்கு வரும் என மெட்ரோ ரயில் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை பூந்தமல்லி-வடபழனி இடையேயான மெட்ரோ ரெயில் சேவையை பிரதமர் மோடி, முதல்-அமைச்சர் விஜய் முன்னிலையில் நாளை தொடங்கி வைக்கிறார். இருவரும் மெட்ரோ ரெயிலில் ஒன்றாக பயணம் செய்கிறார்கள். பிரதமரின் இந்த வருகையையொட்டி, 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்படுகிறார்கள்.

சென்னை முழுவதும் வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் செல்லும் பகுதிகளான மீனம்பாக்கம், கிண்டி, கோட்டூர்புரம், போரூர், நந்தம்பாக்கம் ஆகிய பகுதிகள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பகுதிகளில் டிரோன்கள் பறப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. விடுதிகள், நட்சத்திர ஓட்டல்கள் போன்றவற்றில் போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டுள்ளனர். பிரதமரின் வருகையையொட்டி போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் கூடுதல் கமிஷனர்கள், இணை கமிஷனர்கள், துணை கமிஷனர்கள் கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. பிரதமர் செல்லும் இடங்களில் 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்புக்கும் ஏற்பாடுகளை செய்ய இந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

# "டெல்லி கைது நடவடிக்கைகள் ஜனநாயகத்தையே அழிக்கும் செயல்" தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை: "ஜனநாயகத்தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்" என டெல்லியில் போராடுபவர்கள் மீதான கைது நடவடிக்கைகளைக் கண்டித்துப் பதிவிட்டுள்ளார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்.

இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இன்று டெல்லியில் அரங்கேறி வரும் நிகழ்வுகளும், அமைதிவழியில் போராடுபவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளும், நான் அனுபவித்த நெருக்கடிநிலைக் காலத்தின் வலிமிகுந்த நினைவுகளை மீண்டும் கண்முன் கொண்டுவருகின்றன.

டெல்லியிலும் நாடு முழுவதிலும் கைது செய்து வைக்கப்பட்டுள்ள அரசியல்தலைவர்கள், மாணவர்கள், போராடும் இளைஞர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் போராடும் மாணவர்கள் மீது, பாஜகவின் கிளையாகச் செயல்பட்டுக்கொண்டு, காவல்துறை அடக்குமுறையை ஏவிவிடும் தவெக அரசையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அமைதிவழியில் போராடுவதற்கான தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தும் இளைஞர்கள் மீதான தாக்குதலை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். எதிர்ப்பை வெளிப்படுத்துவது குற்றமல்ல. ஜனநாயகத்தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்பதில் எந்த சமரசத்துக்கும் இடமில்லை. அவர் பதவி விலகுவதோடு மட்டுமல்லாமல், தேர்தல் ஆணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து பாதிப்புகளும் சரிசெய்யப்பட்டு, அதன் சுதந்திரமும் நேர்மையும் மீட்டெடுக்கப்பட வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லியில் இன்று (அக்.10) சிஜேபி சார்பில் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. இந்தச் சூழலில் போராட்டத்துக்கு டெல்லி காவல் துறை அனுமதி மறுத்துள்ளது. இதனால், அதிரடி கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிஜேபி போராட்டம் 2.0

ஜந்தர் மந்தர் மற்றும் மத்திய டெல்லி பகுதியை இணைக்கும் பல்வேறு முக்கிய சாலை சந்திப்புகளில் டெல்லி போலீஸார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுவருகின்றனர்.

டெல்லியில் ஜந்தர் மந்தர் மற்றும் அந்த பகுதியை ஒட்டிய இடங்களில் காணப்படும் போராட்டக்காரர்களை தடுத்துநிறுத்தும் காவல் துறையினர், அவர்களை கைது செய்தும் வருகின்றனர். பெண்கள் அதிகளவில் இந்த போராட்டத்தில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற காரணத்தால் 'பிங்க் மகளிர் காவல் படை'-யினரும் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

சிஜேபி போராட்டத்தில் யூடியூபர் துருவ ராட்டி பங்கேற்க வாய்ப்புள்ளது என்று கருதப்படும் நிலையில், குருகிராமில் அவரை போலீஸார் கைது செய்துள்ளனர். அவரை போலீஸார் எங்கு கொண்டு சென்றுள்ளனர் என்ற தகவலும் கிடைக்கவில்லை. இதற்கு சிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், ஒற்றை நபரை காக்க மத்திய அரசு அதன் படை பலத்தை பயன்படுத்துகிறது. இதனால் டெல்லி முடங்கியுள்ளது என்று ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

அந்த வரிசையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினும் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தனுஷின்பிறந்தநாளைமுன்னிட்டு,திருநாவலூர்ஒன்றியமாணவரணிசார்பில்ஏழை,எளியமாணவ,மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் திருநாவலூர் ஒன்றிய மாணவரணி தலைவர் செங்கை பில்லா மகேஷ் கலந்து கொண்டு, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாணவர்களின்கல்விவளர்ச்சிக்கும்,அவர்களின்நலனுக்கும்ஊக்கமளிக்கும்வகையில்இந்தஉதவிகள்வழங்கப்பட்டன.

# தேவகோட்டை பள்ளியில் மாணவர்களுக்கு நிலவேம்புக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி; நகராட்சி தலைவர் தொடங்கி வைத்தார்



தேவகோட்டை:

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில், நகராட்சி சார்பில் மாணவர்களுக்கு நிலவேம்புக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சியை நகராட்சித் தலைவர் சுந்தரலிங்கம் தொடங்கி வைத்தார்.

மாணவி ரித்திகா வரவேற்றார். தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். நகராட்சித் தலைவர் சுந்தரலிங்கம் தலைமை தாங்கி, மாணவர்களுக்கு நிலவேம்புக்குடிநீர்வழங்கினார்.

தேவகோட்டை நகராட்சிசார்பில்தொடர்ந்து மூன்று நாட்கள் மாணவர்களுக்கு நிலவேம்புக் குடிநீர்வழங்கப்பட உள்ளது. ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியைகள் சிவர ஞ்சனி, முத்துமீனாள் மற்றும் நகராட்சிப் பணியாளர் ஜெகன் ஆகியோர் செய்திருந்தனர்.

# தேனியில் 'ஸ்மார்ட் மீட்டர்' திட்டத்திற்கு எதிராக TNEB ஊழியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



ஸ்மார்ட்மீட்டர்டெண்டரைரத்துசெய்யவலியுறுத்தி, தேனியில் TNEB எம்ப்ளாய்ஸ் ஃபெடரேஷன் சார்பில் மாநில தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இப்போராட்டம், தேனியில் உள்ள மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது. இதில் அமைப்பின்முக்கிய நிர்வாகிகள் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பொதுமக்களையும் மின்வாரியத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் மிகக் கடுமையாகப் பாதிக்கும் "ஸ்மார்ட் மீட்டர்" டெண்டர் திட்டத்தைக் கைவிட்டு, அதனை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

ஸ்மார்ட் மீட்டர் அறிமு கப்படுத்தப்பட்டால் மின்வாரிய ஊழியர்களின் வேலை வாய்ப்பும், பொதுமக்களுக்கான கட்டணச் சலுகைகளும் கேள்விக்குறியாகும் என அச்சம் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, தொழிலாளர்கள் ஸ்மார்ட் மீட்டருக்கு எதிரான கோஷங்கள் அடங்கிய பேனர்களையும் ஏந்தித் தங்களது கண்டனக் குரல்களை வலுவாகப் பதிவு செய்தனர்.

# கோவை ராயல் கேர் மருத்துவமனையில் இதய அவசர சிகிச்சை மருத்துவப் பயிலரங்கம்.

## மாரடைப்பு, இதயத் துடிப்பு சீரற்ற நிலை உள்ளிட்ட அவசர சிகிச்சைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது



கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் இந்திய அவசர மருத்துவச் சங்கம் இணைந்து இதய அவசர சிகிச்சை குறித்த பயிலரங்கம் மற்றும் தொடர் மருத்துவக் கல்வி நிகழ்ச்சி ராயல் ஃபோரம் அரங்கில் நடைபெற்றது.

ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாதேஸ்வரன் தலைமை வகித்து பயிற்சிபட்டறைமுகாமை துவக்கி வைத்து பேசினார்...

அப்போது பேசிய அவர்,இதய நோய் பாதிப்பால் வரும் நோயாளிகளின் நோய் பாதிப்பை கண்டறிந்து விரைவாக செயல்படும்,மருத்துவர்களின் அவசர சிகிச்சைத் திறனை மேம்படுத்தவும், இதய அவசர நிலைகளில் உயிரிழப்புகளைக் குறைக்கும் வகையில்நவீனசிகிச்சை அணுகுமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும் இந்தப் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்..

குறிப்பாக, மாரடைப்பு, இதயத் துடிப்பு சீரற்ற நிலை, இதயத் தடுப்பு மற்றும்பெருநாடிசார்ந்த அவசர பாதிப்புகளைக் கையாளும் முறைகள் குறித்து அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் பயிற்சி வழங்க இருப்பதாக அவர் தெரிவித்தார்..

முன்னதாக நடைபெற்ற துவக்க விழாவில் இந்திய அவசர மருத்துவச் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஸ்ரீநாத் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிலரங்கத்தை துவக்கி வைத்து பேசினார்..

அப்போது பேசிய அவர், இதய அவசர சிகிச்சையின்போது நோயாளிகளின் பாதிப்புகளை விரைவாகக் கண்டறிந்து,உரிய சிகிச்சைகளை உடனடியாக வழங்குவதன் அவசியம் குறித்து விளக்கமளித்தார்..

தொடர்ந்து நடைபெற்ற பயிலரங்கில் இளம் வயதினருக்குஏற்படும்மாரடைப்பு, இதயத் துடிப்பில் ஏற்படும் மாற்றங்கள், உயர் ரத்த அழுத்தத்தால் ஏற்படும் அவசர நிலைகள் மற்றும் நுரையீரல் ரத்தக் குழாயில் ரத்தம் அடைத்தல் போன்ற பாதிப்புகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வழிமுறைகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் துறை சார்ந்த நபுணர்களுக்கு பயிற்சி அமர்வுகள் நடைபெற்றன.

அவசர சிகிச்சைப் பிரிவில் உயிரைக் காக்கும் சிகிச்சை முறைகள்,இதயத் தடுப்பு ஏற்படும் நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் நோயாளிகளைப் பாதுகாப்பாகக் கையாள்வது குறித்தும் மருத்துவக் கருத்துகள் பகிரப்பட்டன.

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு சார்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை, மருத்துவர்கள் கண்ணன் தங்கவேலு, திவ்யா, கமலகண்ணன், ராஜ் விஷ்ணு, அகிலன், இளவரசன் மற்றும் ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் பரந்தாமன், தலைமைச்செயல்பாட்டு அலுவலர் டாக்டர் மணிசெந்தில் குமார், மார்க்கெட்டிங் பிரிவு சீனியர் பொது மேலாளர் வெங்கடேசன் ஆகியோர் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மதுராந்தகம் அருகே

# காட்டுக்கரணை கிராமத்தில் வேணுகோபால சுவாமி திருக்கோயில் தேரோட்ட விழா

செங்கல்பட்டு மாவட்டம்,மதுராந்தகம்அடுத்த அச்சிறுபாக்கம் அருகே உள்ள காட்டுக்கரணை கிராமத்தில்

ஸ்ரீ ராதா ருக்மணி சமேத வேணுகோபால சுவாமி திருக்கோயிலில் புரட்டாசி 4-வது சனிக்கிழமையொட்டி 53 வது ஆண்டு திருத்தேரோட்ட விழா நடைபெற்றது. காட்டுக்கரணை கிராமத்தில் நூற்றாண்டுகள் பழமையான

ஸ்ரீ ராதா ருக்மணி சமேத வேணுகோபால சுவாமி ஆலயம் உள்ளது.இந்த ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் புட்டாச்சி 4-வது சனிக்கிழமை அன்று காலை 8 மணிக்கு ஸ்ரீ ராதா ருக்மணிசமேதவேணுகோபாலசாமி திருத்தேரில் எழுந்தருளி அருள் பாலித்தார். பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என திருநாமம் கூறி தேரின் வடம் பிடித்து இழுக்கதேர் நான்கு மாட வீதிகளிலும் வளம் வந்து தேர் நிலையை அடைந்தது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மண்ணுரிமை நாள் சான்தாமஸ் ஏழுமலை நினைவு நாள்; வி.சி.க.வினர் அனுசரிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்ட மன்றதொகுதி மாவட்டம் சார்பில்பஞ்சமிநிலமீட்பு போராளிகள் செங்கல்பட்டு அருகே காரணை கிராமத்தில் அப்போதைய ஆங்கிலேய அரசுக்கு எதிராக போராடிய மாவீரர்கள் பாப்பநல்லூர் ஜான் தாமஸ் காரணை ஏழுமலை பட்டியலின மக்களின் பஞ்சமிநிலமீட்புமீட்டெடுக்க ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தினர் அப்பொழுது கட்டுக்கடங்கா பொதுமக்கள் போராட்ட களத்தில் போராடி இந்த பஞ்சமி நிலத்தை மீட்டெடுக்க சர்வாதிகாரப் போக்கால் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான மாவீரர்கள் அக்டோபர் 10 நினைவு நாளில் மதுராந்தகம் அருகே உள்ள பாப்பநல்லூர் கிராமத்தில் ஜான் தாமஸ் அவர்களின் நினைவிடத்திற்கு மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் அன்புச்செல்வன் அவர்களின் தலைமையில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்தி அதனை தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக வீர முழக்கமிட்டு அவரது கல்லறையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வீரவணக்கம் செலுத்தினார்கள் இந்த நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் ஒன்றிய செயலாளர் மொறப்பாக்கம் ஏ.க.தயாநிதி ஒருங்கிணைப்பில்

மாவட்ட செயலாளர் பொறியாளர் கீழ்.கா. அன்புச்செல்வன் அவர்களின் தலைமையில் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார்கள் இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் பாக்கம் ஏ.பேரறிவாளன் மாவட்ட செய்தி தொடர்பாளர் மு.கலைக்கதிரவன் மாநில துணை செயலாளர் பா.விஜயகுமார் மகளிரணி மாவட்ட செயலாளர் ரேகாவெங்கடேசன் ஒன்றிய செயலாளர்கள் வடபாதி க.முகிலன் பா.து. பன்னீர் செல்வம் மாவட்ட நிர்வாகிகள் தலித்ராஜன் கண்ணியப்பன் கலையரசன் ஒன்றிய நிர்வாகிகள் முருகவேல் சீனு மதன் சாம்ராஜ் கேது மோகன் அருள் மணிகண்டன் லோகு உள்ளிட்ட ஏராளமான. நிர்வாகிகள் கலந்துகொண்டனர்



மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வகையில், சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டியில் தமிழக வெற்றிக் கழகத்தினர் உற்சாகமாகக் கொண்டாடினர். இதையொட்டி, கட்சியினர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகள்வெடித்தும்தங்களதுமகிழ்ச்சியைவெளிப்படுத்தினர்.இந்தக்கொண்டாட்டத்தில்மணி,குணா,ஜோதிமுருகன், தீனதயாளன், பிரபா, கோகுல் மற்றும் தவெக கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



2026 தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு பட்டாசு விற்பனை செய்ய தற்காலிக பட்டாசு உரிமம்கோரிவிண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை பொது இ-சேவை மையங்களில பட்டாசு உரிமம் கோரும் இடத்தின் புல வரைபடம், கிரையப்பத்திரம், முகவரிக்கான ஆதாரம் (ஆதார் அட்டை/குடும்பஅட்டை), சொத்துவரி செலுத்தியதற்கான ரசீது, கடவுச் சீட்டு அளவு புகைப்படம் மற்றும் 0070-60-103AA-22799 என்ற கணக்கு தலைப்பில் சேவைக் கட்டணமாக ரூ.600/-(ரூபாய் அறுநூறு மட்டும்) செலுத்தியதற்கான ரசீது ஆகிய ஆவணங்களுடன் எதிர்வரும் 18.10.2026 வரை விண்ணப்பம் செய்யலாம். இக்குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப்பின் அதாவது 18.10.2026-க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் ஏற்கப்பட்டதெனில் தற்காலிக உரிமத்தையும், நிராகரிக்கப்பட்டதெனில் அதற்கான ஆணையையும் மனுதாரர்கள் இணையதளம் மூலமாகவே பெற்றுக் கொள்ளலாம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் உரிய உரிமம் பெறாமல் தள்ளுவண்டி, மளிகைக்கடை, பெட்டிக்கடை மற்றும் வீடுகளில் சட்ட விரோதமாக பதுக்கி வைத்திருப்பது கண்டறியப்பட்டால் அரசு விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.



மதுரை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் மதுரை கல்லூரியில் நடத்தப்பட்ட மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர் திரு.மதார் பதூருதின் அவர்கள், மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். தங்கப்பாண்டி அவர்கள், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.வி. கருப்பையா அவர்கள், மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் திரு. தி.நாகராஜன் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திரு.கௌரவ் குமார், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



தேனி மாவட்ட ஆட்சித்தலைவராக திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# திட்டக்குடி உட்கோட்ட காவல் நிலையங்களில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வருடாந்திர ஆய்வு



கடலூர் மாவட்டம், திட்டக்குடி உட்கோட்டத்துக்கு உட்பட்ட திட்டக்குடி, ஆவினங்குடி, ராமநத்தம், வேப்பூர், சிறுபாக்கம் ஆகிய காவல் நிலையங்களில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லா ஐ.பி.எஸ்., அவர்கள் (அக்.9) அன்று வருடாந்திர ஆய்வு மேற்கொண்டார். அப்போது, காவல் நிலையங்களில் பராமரிக்கப்படும் வழக்கு தொடர்பான கோப்புகள், பதிவேடுகள் மற்றும் குற்ற வழக்குகளின் தற்போதைய நிலை ஆகியவற்றை ஆய்வு செய்தார். மேலும், நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை விரைந்து விசாரித்து முடிக்கவும், வழக்கு விசாரணைகளைத்துரிதப்படுத்தவும் சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, வேப்பூர் காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

# கோவை பட்டணம் பகுதியில், "கார்ஸ் 327" நிறுவனம் சார்பில் யூஸ்டு கார்கள், 2வது விற்பனை மாநாடு கோலாகலமாக துவங்கியது

கோவையில் யூஸ்டு கார் வாங்க திட்டமிடுபவர்களுக்கு பயனளிக்கும் வகையில், 500"க்கும் மேற்பட்ட பயன்படுத்தப்பட்ட கார்கள் ஒரே இடத்தில் இடம்பெறும் 11-வது மாபெரும் யூஸ்டு கார்ஸ் மாநாடு துவங்கியு ள்ளது..

"கார்ஸ் 327" நிறுவனத்தின் சார்பில் வருகின்ற நவராத்திரி, ஆயுத பூஜை மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, யூஸ்டு கார்கள் இரண்டாவது மாநாடு, விற்பனை திருவிழா அக்டோபர் 9 முதல் 18-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

காலை 9.30 மணி முதல் இரவு 8 மணி வரை, கோவை பட்டணம் பகுதியில் உள்ள எல் அன்ட் டி பைபாஸ் சாலையில்



அமைந்துள்ள "கார்ஸ் 327" வளாகத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

பல்வேறு வகையான பயன்படுத்தப்பட்ட கார்களை ஒரே இடத்தில் பார்வையிட்டு, தங்களது தேவைக்கும் பட்ஜெட்டுக்கும் ஏற்ற காரை தேர்வு செய்யும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், கார்களை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு பரிசுகள், மற்றும் சிறப்பு சர்விஸ் சலுகைகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குடும்பத்துடன் நேரில்சென்று கார்களை பார்வையிட்டு, விலை மற்றும் வசதிகளை ஒப்பிட்டு, தங்களுக்கு ஏற்ற காரை தேர்வு செய்ய இது ஒரு வாய்ப்பாக அமையும் என கார்ஸ் 327 நிறுவனர் விஷ்ணு வேணுகோபால் தெரிவித்து ள்ளார் என்பது குறிப்பிட த்தக்கது.

## தூத்துக்குடி கோரம்பள்ளம் அய்யனடைப்பு ஸ்ரீசித்தர் நகர் ஸ்ரீசித்தர் பீடத்தில்,

# புரட்டாசி மஹாளய அமாவாசையை முன்னிட்டு பிரம்மாண்டமான மிளகாய் வற்றல் மகா யாகம் நடைபெற்றது

சாக்தஸ்ரீ சற்குரு சீனிவாச சித்தர் தலைமையில் நடைபெறும் இந்த யாகத்தில், காலை 9.10



மணிக்கு கணபதி, நவக்கிரக ஹோமம் மற்றும் மகா பிரத்தியங்கி ராதேவி, மகா காலபைரவர் ஹோமம் தொடங்குகிறது. தொடர்ந்து காலை 11.20 மணிக்கு மகா மிளகாய் வற்றல் யாகமும், மதியம் 12 மணிக்கு 16 வகையான அபிஷேகங்களும் நடைபெற்றது.

மதியம் 1.20 மணிக்கு மகா தீபாராதனையும், 1.30 மணிக்கு பக்தர்களுக்கு மகா அன்னதானமும் வழங்கப்படுகிறது. இரவு 7 மணிக்கு மகா தீபாராதனையுடன் யாக வழிபாடுகள் நிறைவு பெறுகின்றன.

கடன் மற்றும் எதிரித் தொல்லைகள் நீங்கவும், செல்வவளம் பெருகவும், தொழில் விருத்தி மற்றும் விவசாயம் சிறக்கவும் நடைபெறும் இந்த சிறப்பு யாகத்தில் பக்தர்கள் திரளாக பங்கேற்குமாறு சாக்தஸ்ரீ சற்குரு சீனிவாச சித்தர் கேட்டுக் கொண்டு உள்ளார்.

இதுகுறித்து அவர் பேட்டியில் சாக்தஸ்ரீ சற்குரு சீனிவாச சித்தர் தெரிவிக்கையில்: இன்று மகா சத்குருவின் திருவருளால் மிகவும் சிறப்பு வாய்ந்த புரட்டாசி அமாவாசை தினம் அனுசரிக்கப்படுகிறது. தை, ஆடி மற்றும் புரட்டாசி அமாவாசைகளில் மிகவும் முத்திரையானதாகக் கருதப்படும் இந்தப் புரட்டாசி அமாவாசை, பித்ருக்களுக்குரிய வழிபாடுகளுக்கு உகந்த நாளாகும். பௌர்ணமி தொடங்கி கடந்த 15 நாட்களாக நடைபெற்று வந்த பித்ருக்களுக்கான திதி மற்றும் வழிபாடுகள் இன்றுடன் நிறைவு பெறுகின்றன.

தொடர்ந்து பித்ரு பூஜை நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நாளையிலிருந்து நவராத்திரி எனப்படும் மகா சக்தியின் ஒன்பது நாள் திருவிழா மற்றும் சூரசம்கார வழிபாடுகள் தொடங்குகின்றன. இதனையொட்டி, நமது ஆலயத்தில் இன்று காலை முதல் மகா கணபதி பூஜை தொடங்கப்பட்டு, மகா சக்திக்கு 16 வகையான அபிஷேக ஆராதனைகள், மகா வேள்விகள் (ஹோமங்கள்) மற்றும் அன்னதான நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேலும் தற்போதையக் காலக்கட்டத்தில் மழை வளம் சற்று குறைவாகவும், வெயிலின் தாக்கம் அதிகமாகவும் இருப்பதால், வெயிலின் தாக்கத்தைக் குறைத்து நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்கவும், நாட்டு மக்கள் அனைவரும் நீடுழி வாழ்வு பெறவும் மகா சக்திக்குச் சிறப்புப் பூஜைகளும் வழிபாடுகளும் நடத்தப்பட்டன. மகா சக்தியின் திருவருளால் அனைவரும் அனைத்து வளங்களையும் பெற்று நலமுடன் வாழ்வாங்கு வாழ்வார்கள் என்று தெரிவித்தார்.

## கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள,

# குமரகுரு பன்முக கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 'சிறகுகள் 2026' எனும் நிகழ்ச்சி நடைபெற்றது

## திரைப்பட இயக்குநர் ராம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று மாணவர்களுடன் கலந்துரையாடினார்

கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு பன்முக கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் விசுவல் கம்யூனிகேஷன் துறை சார்பில், முன்னாள் மாணவர்களின் சாதனைகளைக் கொண்டாடும் 'சிறகுகள் 2026 , முன்னாள் மாணவர்களின் சாதனைகள் மற்றும் படைப்பாற்றல் அங்கீகாரம்' நிகழ்ச்சி, கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரபல திரைப்பட இயக்குநர் ராம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.




கல்லூரியின் விசுவல் கம்யூனிகேஷன் துறையில் பயின்று தமிழ் திரையுலகில் சாதனை படைத்து வரும் முன்னாள் மாணவர்களான பாடலாசிரியர் மதி புகழேந்தி மற்றும் இளம் திரைப்படத் தொழில்முனைவோர் சுரேந்தர் நளினி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பாராட்டினர்.

2022–2025 கல்வியாண்டு காலகட்டத்தில் அகரம் உதவித்தொகை பயின்ற மாணவரான மதி புகழேந்தி, இயக்குநர் ராமின் 'ஏழு கடல் ஏழு மலை' திரைப்படத்தின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமாகியுள்ளார். கல்வி உதவித்தொகையின் ஆதரவுடன் தனது வளர்த்து, எழுத்தாளராகவும் பாடலாசிரியராகவும் முன்னேறியுள்ள அவரது பயணத்தை பாராட்டினர். அதேபோல், 'ஆழி பிக்சர்ஸ்' நிறுவனம் மூலம் திரைப்படத் தொழில்முனைவோராக வளர்ந்து வரும் சுரேந்தர் நளினி, 'ஏழு கடல் ஏழு மலை' திரைப்படத்தின் இந்திய அளவிலான அனைத்து உரிமைகளையும் பெற்றுள்ளதற்காகக் கவுரவிக்கப்பட்டார்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இயக்குநர் ராம் பங்கேற்கும் 'சொற்களிலிருந்து திரை வரை - சமகாலத் திரைப்படங்களில் படைப்பாற்றல் மிக்க தமிழ்' என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெறுகிறது. இதில் தமிழ் படைப்பெழுத்து, கதை சொல்லும் நுட்பம், பாடல் வரிகள், காட்சித்தொடர்பியல் மற்றும் திரைப்பட உருவாக்கம் குறித்து மாணவர்களுடன் அவர் கலந்துரையாடினார்கற்றது தமிழ், தங்க மீன்கள், தரமணி, பேரன்பு உள்ளிட்ட திரைப்பட ங்கள் மூலம் கவனம் பெற்ற இயக்குநர் ராமுடன் நேரடியாக உரையாடும் வாய்ப்பு, இளம் எழுத்தாளர்கள், திரைப்பட ஆர்வலர்கள் மற்றும் விசுவல் கம்யூனிகேஷன் மாணவர்களுக்கு கிடைத்தது. கோவையில் உள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள், குமரகுரு கல்லூரி மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் திரைத்துறை விருந்தினர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.. முன்னாள் மாணவர்களின் சாதனைகளைக் கொண்டாடுவதுடன், கல்வி நிறுவனங்களுக்கும் படைப்புத் துறைக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தி, அடுத்த தலைமுறை படைப்பாளர்களுக்கு ஊக்கமளிப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாக அமைந்த்து.

# தேசிய அளவிலான இசைப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்து கோவைக்குப் பெருமை சேர்த்த சி.எஸ். அகாடமி மாணவர்கள்

## 270க்கும் மேற்பட்ட பள்ளி இசைக்குழுக்களுடன் போட்டியிட்டு தேசிய அளவில் சாதனை படைத்ததுடன், ஆஸ்கர் விருது பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் முன்னிலையில் இசை நிகழ்த்தி அசத்தினர்.



கோவை சி.எஸ். அகாடமி பள்ளியின் இசைக்குழுவான சி.எஸ். ஹவுலர்ஸ், தேசிய அளவிலான யமஹா இசைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது. இந்தியா முழுவதும் இருந்து 270-க்கும் மேற்பட்ட பள்ளி இசைக்குழுக்கள் பங்கேற்ற இப்போட்டியில், கோவை மாணவர்கள் தேசிய அளவில் அங்கீகாரம் பெற்று நகருக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 2024-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்குழு, பல்வேறு போட்டிச் சுற்றுகளைக் கடந்து தேசிய அளவில் முதல் 20 இசைக்குழுக்களில் ஒன்றாகத் தேர்வானது. தொடர்ந்து, முதல் ஐந்து இறுதிப் போட்டியாளர்களில் இடம்பிடித்து, இறுதியில் இரண்டாம் இடத்தை வென்றது. இசைப் பயணத்தைத் தொடங்கியபோது இக்குழுவின் உறுப்பினர்கள் வெறும் 11 வயதுடையவர்களாக இருந்தனர் என்பது இந்தச் சாதனையை மேலும் சிறப்பாக்கி உள்ளது.

இந்தப் போட்டியின் முக்கிய அம்சமாக, ஆஸ்கார் விருது பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் முன்னிலையில் இசை நிகழ்த்தும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைத்தது. இது இளம் இசைக் கலைஞர்களுக்கு மறக்க முடியாத அனுபவமாகவும், அவர்களின் இசைப் பயணத்தில் முக்கிய மைல்கல்லாகவும் அமைந்தது.

2024-ஆம் ஆண்டு இசையில் ஆர்வமுள்ள இளம் மாணவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சி.எஸ். ஹவுலர்ஸ், தற்போது திறமை, படைப்பாற்றல், ஒழுக்கம் மற்றும் குழு ஒருங்கிணைப்புடன் செயல்படும் சிறந்த பள்ளி இசைக்குழுவாக வளர்ந்துள்ளது. இசைக்குழுப் பயிற்சியாளரின் வழிகாட்டுதலின் கீழ், மாணவர்கள் தங்களது இசைத் திறன்களை மேம்படுத்திக் கொள்வதுடன், குழுவாக இணைந்து இசை நிகழ்த்துவதிலும் சிறந்து விளங்குகின்றனர்

# தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் தொழிற்சாலை அவசியம்: அகில இந்திய வர்த்தகத் தொழில் சங்கத் தலைவர் ஜே. ஜேசையா வில்லவராயர் பேட்டி




தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் தொழிற்சாலை அமைப்பது இன்றைய காலகட்டத்தில் அவசியமானது என்றும், இதன் மூலம் தொழில் வளர்ச்சியும் வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும் என்றும் அகில இந்திய வர்த்தகத் தொழில்சங்கத்தலைவர் ஜே. ஜேசையா வில்லவராயர் தெரிவித்தார்.

அகில இந்திய வர்த்தகத் தொழில் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது:

புதிய நிர்வாகக் குழுவில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும் சங்கம் தொடர்ந்து செயல்படும்.

தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டத்தை சில உப்பள உரிமையாளர்கள் எதிர்த்து வருகின்றனர். இருப்பினும், தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை கருத்தில் கொண்டு இத்திட்டம் அவசியமானதாகும். தமிழக அரசு எடுக்கும் முடிவைப் பொறுத்து சங்கத்தின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும்.

மேலும், தூத்துக்குடி வாகைக்குளம் விமான நிலையத்திலிருந்து டெல்லி, ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களுக்கு கூடுதல்விமானசேவைகள் தொடங்க வேண்டும். குறிப்பாக சரக்கு விமான சேவை தொடங்கப்பட்டால் தொழில் நிறுவனங்களுக்கு பெரும் பயனளிக்கும்.

தூத்துக்குடிக்கு மேலும் பல தொழிற்சாலைகள் வருவதன்மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதுடன், நகரின் பொருளாதார வளர்ச்சியும் மேம்படும். இதற்காக தமிழக அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என்றார்.

பேட்டியின்போது சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜே. பிரேம் பால் நாயகம், பொருளாளர் பி. பொன்குமரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



# திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் வளாகத்தில் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அமைச்சர்கள் பெ.மதன் ராஜா, ஆ.ஸ்ரீநாத் ஆகியோர் திறந்து வைத்தனர்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணி யசுவாமி திருக்கோயில் வளாகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கருங்கல் யாகசாலை மண்டபம், கைப்பேசி பாதுகாப்பு மையம்,3 சுகாதாரவளாகத்திற்கான கட்டடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் ஆகியோர் இன்று (10.10.2026), திறந்து வைத்து பார்வையிட்டனர்.

பின்னர் அமைச்சர்கள் தெரிவிக்கையில் "திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலானது முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படைத்தலமாக உலக பிரசித்திப்பெற்ற ஸ்தலமாக விளங்குகிறது. பக்தர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் திருக்கோவில் வளாகத்தில் பல்வேறு கட்டுமானப் பணிகள் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் இன்றைய தினம் இத்திருக்கோயிலுக்கு வருகை தரும்பக்தர்களின்அடிப்படை வசதிகளை நிறைவேற்றிடும் பொருட்டு புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டுமான பணிகளான ரூ.1 கோடி மதிப்பீட்டில் ராஜ கோபுரத்திற்கு அருகில் கருங்கல்லால் ஆன யாகசாலை மண்டபம், ரூ.24 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் ஒன்றைஅனுகிரகவிலாசம், திருக்கோயிலின் வடக்கு நுழைவாயில் ரூ.98 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம், ரூ.1.74 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் அன்னதானக் கூடத்திற்குப் பின்புறம் சுகாதார வளாகம், இடும்பன் கோவில் அருகில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் கைபேசி பாதுகாப்பு மையம் ஆகிய ஐந்து கட்டடங்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டு உள்ளது என தெரிவித்தனர்.

இவ்விழாவில்,மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குருச்சந்திரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இரா.அருள்முருகன் மற்றும் அறங்காவலர்கள் திருமதி வனிதா, செல்வராஜ், திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் அருணாசலம் தூத்துக்குடி, திருக்கோயில் துணை ஆணையர் யக்ஞ நாராயணன், திருச்செந்தூர் வருவாய்க் கோட்டாட்சியர் கௌதம், திருக்கோயில் உதவி ஆணையர் சி.லோகநாதன், திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் ஈழவேந்தன், கண்காணிப்பாளர்கள், திருக்கோயில் பணியாளர்கள், பொதுமக்கள் மற்றும்பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# கோவையில் தனிஷ்க் 'ரிவா' திருமண நகைக் கண்காட்சி தொடக்க விழா, 5,000 சதுர அடி பரப்பளவில் மணப்பெண்களுக்கான பாரம்பரிய மற்றும் நவீன நகை வடிவமைப்புகள் பார்வையாளர்கள் கவனத்தை ஈர்த்துள்ளது



தங்கம் மற்றும் வைர நகைகள் விற்பனையில் இந்திய அளவில் முன்னனி நிறுவமான தனிஷ்க் நிறுவனத்தின் ரிவா திருமண நகைக் கண்காட்சி தாஜ் விவாந்தா நட்சத்திர ஓட்டல்அரங்கில்தொடங்கியது. அக்டோபர் 10 ந்தேதி துவங்கி 12 ந்தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் திருமண மரபுகள் மற்றும் சடங்குகளுக்கு ஏற்ற மணப்பெண்களுக்கான பிரத்யேக நகைத் தொகுப்புகள் இடம்பெற்றுள்ளன.

பாரம்பரிய தங்க நகைகள், குந்தன் நகைகள், போல்கி நகைகள், நவரத்தினங்கள் மற்றும் வைர நகைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆபரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கோயில் வடிவமைப்புகள், மலர்கள், மயில் உருவங்கள் மற்றும் நுணுக்கமான கைவினை வேலைப்பாடுகளுடன் உருவாக்கப்பட்ட நகைகள் பார்வையாளர்களைக் கவரும் வகையில் அமைந்துள்ளன.

மேலும், மணப்பெண்களுக்கான கழுத்தணிகள், அடுக்கு ஆரங்கள்,வளையல்கள், நெற்றிச்சுட்டி, மாதா பட்டி உள்ளிட்ட பாரம்பரிய அணிகலன்களுடன்,நவீனவடிவமைப்பிலான ஆபரணங்களும் இடம்பெற்றுள்ளன.

திருமணத்தின் பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்ற வகையில், தங்களது விருப்பத்திற்கும் ரசனைக்கும் ஏற்ப நகைகளைத் தேர்வு செய்யும் வாய்ப்பை இந்தக் கண்காட்சி வழங்குகிறது.

இதுகுறித்து தனிஷ்க் நிறுவனத்தின் தமிழ்நாடு வட்டார வணிக மேலாளர் டி. சந்திரசேகர் கூறுகையில், "தமிழ்நாட்டின் திருமண மரபுகள் பாரம்பரியம் மற்றும் கைவினைத் திறனுடன் நெருங்கிய தொடர்புடையவை. இந்த மரபுகளைக் கொண்டாடும் வகையிலும், இன்றைய மணப்பெண்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகையிலும் ரிவா திருமண நகைக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகையான நகைகளை ஒரே இடத்தில் பார்வையிட்டு தேர்வு செய்யும் வாய்ப்பை மணப்பெண்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்குகிறோம்" என்றார்.

தனிஷ்க் நிறுவனத்தின் தமிழ்நாடு நகைத் தயாரிப்பு பிரிவு சார்ந்த சந்தோஷ் ஈ.ஏ.எஸ். கூறுகையில், கோவை வாடிக்கையாளர்கள் தங்களது திருமணத்திற்குத் தேவையான நகைகளை எளிதாகத் தேர்வு செய்யும் வகையில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பாரம்பரிய நகைகள் முதல் நவீன வடிவமைப்புகள் வரையிலான பல்வேறு ஆபரணங்கள் ஒரே இடத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

கண்காட்சிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு பழைய தங்க நகைகளை மாற்றும் திட்டம் உள்ளிட்ட சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு முழுவதும் 67 விற்பனை நிலையங்களுடன் செயல்பட்டு வரும் தனிஷ்க் நிறுவனம், திருமண நகைகளுக்கான தனதுபிரத்யேகத்தொகுப்புகளை வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் தமிழகத்தில் முதல் முறையாக இந்தக் கண்காட்சியை நடத்துவது குறிப்பிடதக்கது..





ஈரோடு மாவட்டம், பவானியில் அமைந்துள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோவிலில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி மற்றும் மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவக் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கே.ஜே. அருண்ராஜ் ஆகியோர் சாமி தரிசனம் செய்தனர்.



ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டிவலசு அரசு மேல்நிலைப் பள்ளியில் வாக்காளர் பட்டியலில் புதிதாகப் பெயர் சேர்ப்பதற்கான படிவம் 6 சிறப்பு முகாம் நடைபெற்றது.இம்முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு, வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை அளித்து பயன்பெற்றனர்.இம்முகாமை ஈரோடு மாநகராட்சி 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். நந்தகோபு நேரில் பார்வையிட்டார்.

# ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவகங்களிலும் தொடர் ஆய்வு நடைபெற்று வருகிறது

## கலெக்டர் கந்தசாமி தகவல்





ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு–

09.10.2026 நாளிட்ட பத்திரிக்கை செய்தியின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விஜயமங்கலம் டோல்கேட் அருகே ஆர்யாஸ் என்ற உணவகம் நியமன அலுவலர் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் சுகாதாரமற்றநிலையில் இயங்கி வந்த சமையற்கூடம், உணவு சேமிப்பு இடம், விற்பனை பகுதி ஆகியவைகள் தர ஆய்வு செய்யப்பட்டு, உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டம்விதிமீறல்களுடன் செயல்பட்டு வந்த உணவகத்திற்கு உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டதுடன், உணவகத்தின் விற்பனைக்கு தடை செய்யப்பட்டு நோட்டீஸ் விடுக்கப்பட்டது. ஆய்வின்போது உணவு பாதுகாப்பு முழுமையான லேபிள விபரங்கள் இல்லாமல் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 60 பாப்கார்ன் பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு, 7 உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தொடர் ஆய்வு அறிவிப்புகளின் கீழ் எந்தவித முன்னேற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளாத தரமற்ற உணவகம் மீது மாவட்ட தீர்ப்பு வழங்கும் அலுவலரிடம் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவகங்களிலும் தொடர் ஆய்வு நடைபெற்று வருகிறது. மேலும் உணவுப்பொருள் குறித்து புகார்களை 0424 2223545 மற்றும்9444042322என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.அவ்வாறு புகார் அளிக்கும் நுகர்வோர் மற்றும் பொதுமக்களின் விபரம் ரகசியமாக வைக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார். unavupugar@gmail.comஎன்ற இணையதளம் வாயிலாகவும் புகார் அளிக்கலாம்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தி வளாகத்தில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகத்தில் மின்னணு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல் பெயர் திருத்தம் செய்தல் பெயர் நீக்கம் செய்தல் செல்போன் எண் இணைத்தல் மற்றும் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தல் உட்பட மின்னணு குடும்ப அட்டைதாரர்களுக்கான சிறப்பு முகாம் வட்ட வழங்கல் அலுவலர் இளையராஜா முன்னிலையில் நடைபெற்றது. இதில் குடிமை பொருள் வழங்கல் திட்ட தனி வருவாய் ஆய்வாளர் ராஜா மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் முகாமில் ஏராளமான பொதுமக்கள் தங்களது குறைகளை மின்னணு மனுக்களாக கொடுத்து உடனடியாக தங்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொண்டனர்.

# கோவை, மதுரை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் மிதமான மழை வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் கோவை, நீலகிரி, மதுரை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் (அக்.11) மிதமா ன மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தெற்கு தமிழக கடலோர பகுதிகளின்மேல் சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழகபகுதிகளின்மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலி ருந்து உள் தமிழகம் மற்றும் உள் கர்நாடகா வழியாக வடக்கு மத்திய மகாராஷ்டிரா வரை சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (அக்.11) நீலகிரி,கோவை, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தின் இதர பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

அக்டோபர் 12-ம் தேதி நீலகிரி,கோவை,ஈரோடு, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் மிதமான மழையும், இதர பகுதிகளில் லேசான மழையும் பெய்யக்கூடும். 13-ம் தேதி தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர பகுதிகளில் லேசான மழையும், 14-ம் தேதி தென்தமிழகமாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், இதர பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும்.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், குருவரெட்டியூர் ஊராட்சி, இழுப்பிலி கிராமத்தில் பனைவிதைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (10.10.2026) நட்டு வைத்தார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.